DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திருமலை குமரன் | Father/Husband Name : சக்கநாயக்கர் |
| Age : 67 | Village : அம்மையார்பட்டி |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 17, 2026

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் அம்மையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், என்னுடைய அண்ணன் மகளை (அ.சா.1) அவர் திருமணம் செய்துள்ளார். என்னுடைய வீடு, ஆஜர் எதிரி வீடு மற்றும் என்னுடைய அண்ணன் மகள் ராஜேஸ்வரி (அ.சா.1) வீடு அனைத்தும் அருகருகே இருக்கிறது. ராஜேஸ்வரியின் வீட்டிற்கு எதிரி அடிக்கடி மது அருந்துவிட்டு வந்து பிரச்சனை செய்து கொண்டிருப்பார். 24.01.2022 ம் தேதி மாலை சுமார் 05.00 மணி அளவில் எதிரி ராஜேஸ்வரியின் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது நான் அதன் அருகில் தான் இருந்தேன். ஆஜர் எதிரி ராஜேஸ்வரியை பார்த்து தேவிடியா என்று கீழ்த்தரமாக ஏசி, மது குடிக்க பணம் வேண்டும் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ராஜேஸ்வரியின் தலைமுடியை பிடித்து இழுத்து அவரை அடித்தார். மேற்படி பிரச்சனை ஆனது ஆஜர் எதிரி வீடு உள்ள தெருவில் வைத்து நடைபெற்றது.

3. நான் சம்பவ இடத்திற்கு செல்லவும் அருகில் உள்ளவர்களும் வந்து விட்டார்கள். எங்களுடைய மகளை (அ.சா.1 - ராஜேஸ்வரி) மேலும் அங்கு இருக்க வைத்தால் ஏதாவது பிரச்சனை ஆகிவிடும் என்று கூறி எங்களுடைய வீட்டிற்கு அவரை அழைத்து வந்து விட்டோம். அன்றைய தினம் இரவு எதிரி எங்கள் அனைவரையும் வெட்டி விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். எதிரி, அ.சா.1 ராஜேஸ்வரியை விளக்குமாற்றை வைத்து அடித்ததில் அதில் உள்ள குச்சி பட்டு அவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது, அதற்காக செவல்பட்டியில் உள்ள சரவணா மருத்துவமனைக்கு சென்று ராஜேஸ்வரி ஊசி போட்டுக் கொண்டார்.

4. சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் (22 ஆம் தேதி) காலை வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு போலீசார் உடனே வந்து விசாரணை செய்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

5. நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கிறார்கள். அதில் ஒரு மகள் போலீசாக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் சாத்தூரில் உள்ள காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வேலை செய்து

வந்தார் என்றால் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வேலை செய்தார். வழக்கு சம்பவம் நடைபெற்ற காலத்தில் அவர் சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வேலை செய்தார் என்றால் சரிதான். ஆகையால், அவருக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் அனைவரையும் தெரியும் என்றால் தெரியாது. என்னுடைய மகளுக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உள்ள காவலர்களை தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

6. அ.சா.1 ராஜேஸ்வரி என்னுடைய அண்ணன் மகள் ஆவார். நான் எங்கள் ஊரில் உள்ள வடக்கு தெருவில் குடியிருக்கிறேன் என்றால் தெற்கு தெருவில் குடியிருக்கிறேன். எதிரியின் வீடு முதலியார் வடக்கு தெருவில் இருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய வீடு நாயக்கர் தெற்கு தெருவில் இருக்கிறது என்றால் சரிதான், இரண்டும் அருகருகே தான் இருக்கிறது. எங்கள் இருவர் வீட்டிற்கும் இடையே சுமார் 200 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் நடந்து சென்றால் ஒரு நிமிடத்தில் செல்லக்கூடிய தூரத்தில் இருக்கிறது, எதிரியின் வீட்டில் இருந்து சத்தம் போட்டால் எங்கள் வீட்டில் கேட்கும்.

7. எதிரி கொத்தனார் வேலை செய்து வருகிறார். அவர் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று விட்டு எத்தனை மணிக்கு வருவார் என்றால் அவர் ஆள் வைத்து வேலை செய்து வருவதால் எப்பொழுது வேண்டுமானாலும் செல்லலாம், எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். வழக்கு சம்பவ சமயத்தில் அவர் வேலைக்கு சென்று விட்டார் என்றால் வீட்டில் தான் இருந்தார். அவர் வேலைக்கு சென்றாரா இல்லையா என்பதை அவருடைய வீட்டிற்கு அருகே குடியிருப்பவர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 – ராஜேஸ்வரி பயர் ஆபீஸில் வேலை செய்கிறார். அவர் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று, எத்தனை மணிக்கு வருவார் என்றால் காலை ஏழு மணிக்கு சென்று விட்டு, மாலை ஐந்து மணிக்கு மேல் வருவார்.

8. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் தேதியில் அவர் வேலைக்கு சென்று இருந்தார் என்றால் வீட்டில் தான் இருந்தார். வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்பதை எதிரியின் மூத்த மகளை விசாரித்தால் தெரியும் என்றால் அவருக்கு தெரியாது. மூத்த மகள் எதிரியின் வீட்டு அருகே தான் குடியிருக்கிறார் என்றால் அவர் வடக்கு தெருவில் கூடியிருக்கிறார். எதிரியின் மூத்த மகள் எதிரி வீடு அருகில்தான் குடியிருக்கிறார் என்றாலும், வழக்கிற்காக வடக்கு தெருவில் குடியிருக்கிறார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி தற்போது அவருடைய மூத்த மகளுடன் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. ராஜேஸ்வரிக்கும் அவருடைய மூத்த மகளுக்கும் தற்போது பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எதிரி தன்னுடைய மூத்த மகளுடன் பேசிக்கொள்வார் என்றாலும், அவருடைய வீட்டிற்கு சென்று வருவார் என்றாலும் சரிதான்.

9. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் காலத்தில் எதிரி அவருடைய மூத்த மகள் வீட்டில் தான் இருந்தார் என்றாலும், அங்குதான் எதிரி சாப்பிட்டு வந்தார் என்றாலும், எதிரியும் ராஜேஸ்வரியும் ஒன்றாக வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சத்தம் கேட்கவும் நான் எதிரியின் வீட்டிற்குள் சென்று விட்டேன் என்றால் வீட்டிற்குள் செல்லவில்லை, வீட்டிற்கு வெளியே தெருவில் இழுத்து போட்டு அடித்ததால்

அங்கு நின்று பார்த்தேன். நான் சம்பவத்தை தடுக்கவில்லை என்றால் நானும் அருகில் உள்ளவர்களும் சேர்ந்து தடுத்தோம். வழக்கு சம்பவம் நடைபெற்ற போது சுமார் 50 நபர்கள் கூடியிருப்பார்களா என்றால் கூடியிருப்பார்கள். யாரெல்லாம் சேர்ந்து சம்பவத்தை தடுத்தோம் என்றால் யார் என்று குறிப்பிட்டு கூற முடியாது, அருகில் இருந்த நபர்கள் சேர்ந்து தடுத்தோம். அருகில் இருந்த நபர்கள் சேர்ந்து சம்பவத்தை தடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சம்பவம் நடைபெற்ற போது நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியில்ல.

10. வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு போலீசார் வந்து விட்டார்கள் என்றால் மறுநாள் தான் வந்தார்கள். யாரெல்லாம் மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் ராஜேஸ்வரி, அவருடைய மகன் மற்றும் ராஜேஸ்வரியின் தம்பி கணேஷ் ஆகிய மூன்று பேரும் சென்றார்கள். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் இரவு ஏழு மணிக்கு பிறகு சென்றார்கள். இந்த விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் கூறினேன். எதிரி வெட்டி விடுவதாக கொலை மிரட்டல் விடுத்தார் என்ற விபரத்தையும், ராஜேஸ்வரியை விளக்குமாற்றால் அடித்தார் என்ற விபரத்தையும் போலீசார் என்னை விசாரித்த போது நான் கூறினேனா என்றால் கூறினேன். எதிரி வெட்டி விடுவதாக மிரட்டியது தொடர்பாக நான் தனியாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எதிரி என்னை மிரட்டி இருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் அவர் என்னுடைய மருமகன் என்பதால் புகார் கொடுக்கவில்லை.

11. மருத்துவமனையில் இருந்து யாரெல்லாம் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் மறுநாள் தான் ராஜேஸ்வரி காவல் நிலையத்திற்கு சென்றார். என்ன புகார் கொடுத்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் நேரடியாக பிரச்சனை எதுவும் கிடையாது என்றால் நான் ராஜேஸ்வரியை எதிரியுடன் சேர்த்து வைப்பதற்காக பேசியும், அதற்காக என்னுடைய மனைவி எதிரியின் காலில் விழுந்தும் கேட்டு, எதிரியையும் ராஜேஸ்வரியையும் சேர்த்து வைத்த பிறகும் பிரச்சனை ஏற்பட்டது, எதற்காக இவ்வாறு நடந்து கொள்கிறாய் என்று எதிரியிடம் கேட்டதற்கு அவர் என்னை அடிக்க வந்தார். எதிரியின் காலில் விழுந்து ராஜேஸ்வரி உடன் சேர்ந்து வாழுமாறு நாங்கள் கூறியதாகவும், எதிரி என்னை அடிக்க வந்ததாகவும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

12. ராஜேஸ்வரி எப்பொழுது புகார் கொடுத்தார் என்றால் 11.00 மணிக்கு மேல் சென்று புகார் கொடுத்தார். யாரெல்லாம் புகார் கொடுக்க சென்றார்கள் என்றால் ராஜேஸ்வரி, அவருடைய மகன் மற்றும் ராஜேஸ்வரியின் தம்பி கணேஷ் ஆகிய மூவரும் சென்றார்கள். ராஜேஸ்வரியின் தம்பி கணேஷ் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்து எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சுமார் ஒரு மணி நேரத்தில் வந்தார்கள். போலீசார் அப்பொழுது தெருவில் உள்ள அனைவரையும் விசாரித்தார்கள் என்றால் அப்பொழுது தெருவில் வேறு யாருமில்லை. போலீசார் எங்கள் தெருவிற்கு வந்து விசாரித்த போது அங்கு இருந்த மக்கள் புகார் பொய் என்று கூறினார்கள் என்றாலும், என்னுடைய மகளின் செல்வாக்கை பயன்படுத்தி இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

13. மகேஸ்வரியின் வீடு எதிரியின் வீட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில்

இருக்கிறது என்றால் மகேஸ்வரியின் வீட்டில் இருந்து பார்த்தால் எதிரியின் வீடு தெரியும். என்னுடைய வீடு எங்கே இருக்கிறது என்றால் மகேஸ்வரியின் வீட்டிற்கு கிழக்கே இருக்கிறது. மகேஸ்வரி பயர் ஆபீஸில் வேலை செய்கிறார். வழக்கு சம்பவம் நடைபெற்ற போது அவர் வீட்டில் தான் இருந்தார். வழக்கு சம்பவம் நடைபெற்றதை மகேஸ்வரி தடுக்கவில்லை என்றால் தடுத்தார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், புகார் கொடுத்தது என்னுடைய அண்ணன் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ராஜேஸ்வரியை எதிரி ஆபாசமாக பேசவோ, தலைமுடியைப் பிடித்து இழுக்கவும், தாக்கவோ இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 17, 2026 5:44 PM

Judicial Magistrate 2, Sattur